அ.வ.எண். **478/2018** பி.வா.சா.**1,** கவிதா, க/பெ. ஜெய்சங்கர் நாள்**: 22.02.2024**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> **:**

**1.** வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி கண்ணகியை எனக்கு தெரியும். வாதியின் கண்ணகியின் தகப்பனார் பெயர் ரெங்கநாதன் ஆகும். வாதியின் தாயார் பெயர் கனகாம்பாள் ஆகும். வாதி கண்ணகியின் உடன்பிறந்தோர் கலைச்செல்வி, கவிதா, கிருஷ்ணகுமார் ஆகியோர் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் ரெங்கநாதனின் உடன்பிறந்த சகோதரர்கள் தங்கராசு, செல்வராசு ஆகியோர் ஆவார்கள். ரெங்கநாதனும், கனகாம்பாளும் வால்பாறை, அக்காமலையில் உள்ள ஊசிமலை எஸ்டேட்டில் வேலைபார்த்தார் என்றால் சரிதான். ரெங்கநாதனும், கனகாம்பாளும் ஊசிமலை எஸ்டேட்டில் வேலைப்பார்த்துதான் கொத்தமங்கலத்தில் சொத்துக்கள் வாங்கினார்கள் என்றால் கனகாம்பாள் வேலைபார்த்து தனிப்பட்ட முறையில்தான் சொத்தினை வாங்கினார். கனகாம்பாள் எந்த வருடம் சொத்து வாங்கினார் என்றால் 1979 இல் வாங்கினார். மேற்படி விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. தெரியும்.

2. 1979 இல் என்னுடைய வயது என்னவென்றால் அந்த வருடத்தில்தான் நான் பிறந்திருப்பேன். கனகாம்பாள் பெயரில் சொத்து வாங்கியதாக கூறப்படும் அசல் ஆவணத்தினை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி அசல் ஆவணத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதி கண்ணகி எத்தனை சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் நாங்கள் வாங்கிய சொத்திற்காகத்தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் வாங்கியதாக சொல்லப்படும் சொத்திற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 3 ஆம் பிரதிவாதி கவிதா பெயரில் உள்ளது. கவிதா பெயரில் உள்ள பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கிரயம் வாங்கும்போது வில்லங்கம் எடுத்துப்பார்த்தேனா என்றால் பார்த்தேன். வாதி கண்ணகியின் சகோதரர் கிருஷ்ணகுமார் என்பவர் நான் கிரயம் வாங்குவதற்கு முன்பே இராமசாமி என்பவருக்கு அதே சொத்தினை கிரயம் கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் எந்த வருடம் கிருஷ்ணகுமாரிடம் இராமசாமி கிரயம் வாங்கினார் என்ற விபரம் தெரியாது.

3. நான் சொல்வதுபோல் பட்டா கவிதா பெயரில் மட்டும் இல்லை என்றாலும் கவிதா இராமசாமி பெயரில் கூட்டாக பட்டா உள்ளது என்றாலும் நான் கிரயம் வாங்கியபிறகுதான் கவிதா, இராமசாமி பெயரில் கூட்டுப்பட்டாவை வாங்கினார்கள்.

(வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. )